இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 171 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 18 – ஞாயிற்றுக்கிழமை 01 பிப்ரவரி 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 171 : Thiruvalluvar Year - 2057 - Thai 18 - Sunday 01 February 2026 - Chennai 16 Pages ₹ 5.00





இல்லத்தரசிகளின் உழைப்பை
அங்கீகரிக்க கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்...
1 கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து
831 பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய்...
தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!




செ.ம.தொ.இ / 127 / வரைகலை / 2026


## 100 நாள் வேலைத் திட்டத்தைச் சிதைத்துவிட்ட மோடி அரசு – மகாத்மா காந்தியின் பெயரிலேயே திட்டத்தைத் தொடராவிட்டால்

# மக்கள் துணையுடன் திரும்பப் பெற வைப்போம்!

## காரைக்குடி – அரசு விழாவில் ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**காரைக்குடி, பிப்.1-**

**“நூறு நாள் வேலைத் திட்டம் மகாத்மா காந்தியின் பெயரிலேயே தொடரா விட்டால் மக்கள் துணையுடன் திரும்பப் பெற வைப் போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றும்போது ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2026) சிவகங்கை மாவட் டம், காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

சிவகங்கை என்றாலே சிலிர்ப்பு! ஏன் தெரியுமா? இன்றைக்கு நேற்று அல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ் நாகரிகம் ஓங்கியிருந்ததற்கான கீழடித் தடயங்கள் கிடைத்த மண் இந்த மண்! பலரின் வீரத்தால், தியாகத்தால் சிவந்த மண்! முத்து வடுகநாத பெரிய உடையாத் தேவர் - அவர் மனைவி வீர மங்கை வேலுநாச்சியார் - அவரது மகள் வெள்ளச்சி நாச்சியார் என்று ஒரு குடும் பம் வாழையடி வாழையாக ஆங்கிலே யர்களை எதிர்த்து நின்று தாய்நிலத்தை காத்த மண் இது!

விடுதலை மற்றும் தியாகத்தின் அடை யாளங்களாக வாழ்ந்து, இந்த மண் ணுக்கு உரமாகியுள்ள மருது சகோதரர் களை தந்த மண் அல்லவா சிவகங்கை! இவர்கள் மட்டுமல்ல! அடுத்த நிமிடம் மர ணம் என்று தெரிந்தே, உடலில் நெருப் பைக் கட்டிக்கொண்டு, ஆயுதக் கிடங்கு களில் குதித்த குயிலி வாழ்ந்த மண் இந்த மண்! அதனால்தான், இவர்கள் பெயரை எல்லாம் சொல்லி, இங்கே நிற்கும்போது எனக்குள்ளே தமிழ் வீரமும், உணர்ச்சி யும் பொங்கி எழுகிறது!

இந்த விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற அமைச்சர் பெரியகருப்பன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் பொற்கொடி அவர்களுக்கும், மாவட்ட அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2026) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில், 2,559 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலான 49 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 13 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 28 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சிவ.வீ.மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, மாங்குடி, டாக்டர் முத்துராஜா, முன்னாள் அமைச்சர்கள் அன்வர் ராஜா, தென்னவன், வேளாண்மை – உழவர் நலத்துறை செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா.பொற்கொடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் அண்ணன் சிதம்பரம் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்; அலுவலகத் திற்கு அதைத் தொடர்ந்து என்னுடைய இல்லத்திற்கு வந்து, என் கல்லூரிகளின் திறப்பு விழாவிற்கு நேரில் வரவேண்டும் எனக் கேட்டார். நான் தேதி கொடுத்தேன். கொடுத்தேன் என்று சொல்வதைவிட அவர் சொன்னதை நான் ஒப்புக்கொண்டேன்; அதுதான் உண்மை. அதைப் பயன்படுத் திக் கொண்டு நம்முடைய பெரியகருப்பன் அவர்கள், அவருடைய பெயரைப்போ லவே பெரிய விழாவாக இதை ஏற்பாடு செய்திருக்கிறார். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என்று சொல்வார்களே, அதைப்போல ஒரு தேதியை பெற்றுக் கொண்டு 5 நிகழ்ச்சிகளை அவர் நடத்தி யிருக்கிறார்.

### பெயரைப் போலவே பெரிய விழாவாக நடத்திய பெரியகருப்பன்!



**முன்னாள் ஒன்றிய அமைச்சர் அண்ணன் சிதம்பரம் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்; அலுவலகத்திற்கு அதைத் தொடர்ந்து என்னுடைய இல்லத்திற்கு வந்து, என் கல்லூரிகளின் திறப்பு விழாவிற்கு நேரில் வரவேண்டும் எனக் கேட்டார். நான் தேதி கொடுத்தேன். கொடுத்தேன் என்று சொல்வதைவிட அவர் சொன்னதை நான் ஒப்புக்கொண்டேன்; அதுதான் உண்மை. அதைப் பயன்படுத்திக் கொண்டு நம்முடைய பெரியகருப்பன் அவர்கள், அவருடைய பெயரைப்போலவே பெரிய விழாவாக இதை ஏற்பாடு செய்திருக்கிறார். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என்று சொல்வார்களே, அதைப்போல ஒரு தேதியை பெற்றுக் கொண்டு 5 நிகழ்ச்சிகளை அவர் நடத்தியிருக்கிறார்**

### ஐந்து விழாக்கள்!

நேற்று மாலை 3 விழாக்கள் – முதலில்,

❖ பொதுவுடைமை இயக்கத்தின் மாபெரும் தலைவராக இருந்த தோழர் ஜீவா அவர்கள், அண்ணல் காந்தியடி களை சந்தித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் சிராவயலில், தமிழ்நாடு அரசின் சார்பில், சிலையுடன் கூடிய நினைவரங் கத்தை திறந்து வைத்தேன்.

❖ அடுத்து, “தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவை, அரசு சார்பில் கொண்டாடு வோம்” என்று அறிவித்திருந்தோம். குன் றக்குடி மடத்தில் இன்றைய அடிகளார் மிகச்சிறப்பாக அதை ஏற்பாடு செய்திருந் தார்.

❖ அந்த நிகழ்ச்சிக்கு அடுத்து, திரா விட இயக்கத்தின் பகுத்தறிவு கவிஞர் என்று தந்தை பெரியாரால் போற்றப்பட்ட சிறப்புக்குரிய கவியரசு முடியரசனார் அவர்கள். இன்னும் சொன்னால், தலைவர் கலைஞருக்கு நெஞ்சுக்கு நெருக்கமான கவிதைத் தோழர். அவருடைய சிலை யைத் திறந்து வைத்தேன். இதுமட்டுமா!

❖ இன்று கானாடுகாத்தான் பேரூ ராட்சியில் செட்டிநாடு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற் கான புதிய கட்டடங்களை திறந்து வைத் திருக்கிறேன். 330 ஏக்கரில், அந்தக் கல்லூரி அமைந்திருக்கிறது. தற்போது 361 மாணவிகள், 128 மாணவர்கள் என்று மொத்தம் 489 மாணவர்கள் இளங்கலை வேளாண்மை படித்துக் கொண்டு வருகிறார்கள். அந்தக் கல்லூரி யில் மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகிறது. 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் பன்முகத் தன்மை கொண்ட மாதிரி வேளாண் காடுகள் ஒன்றும் அமைக்கப் பட்டிருக்கிறது.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## மூன்று மாதம் கழித்து வருவேன்! அப்போதும்

# முதலமைச்சராக எனது கோரிக்கையை நிறைவேற்றுவார்!

## காரைக்குடி அரசு விழாவில் – முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. உறுதி!

சிவகங்கை, பிப். 1 –

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நேற்று ரூபாய் 100 கோடி மதிப்பிலான புதிய சட் டக் கல்லூரி கட்டிடத்தை முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. பேசியதாவது:-

2021 மே மாதம் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழக அரசு பதவி ஏற்றது. அவர் முதல்வராக பதவி ஏற்ற ஒரு வாரத்தில் நானும், கார்த்தி எம்.பி., எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமைச் செயலகத்தில் சந் தித்து இரண்டு கோரிக்கைகள் அடங்கிய மனுவை கொடுத்தோம்.



அதில் முதல் மனுவில், தலைவர் கலைஞர் அவர் கள் முதல்வராக இருந்தபோது சிவ கங்கையில் மருத்துவக் கல் லூரி அறிவித்தார்.

இரண்டாவது கோரிக்கை மனுவில், உங்களது ஆட்சி யில் சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மை கல்லூரி, சட்டக் கல்லூரி ஏற்படுத்தப்பட வேண் டும் என்று கோரிக்கை வைத் தோம்.

உடனடியாக அவர் அமைச் சர், அதிகாரிகளை கலந்து கொண்டு சொல்கிறேன் என்று கூறவில்லை. எங்களிடம், அதற் கென்ன உடனடியாக செஞ்சிர லாமே என்று கூறினார். அவர் சொல்லியவாறு ஒருவாரத்தில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் சட்டக் கல்லூரி, செட்டிநாட்டில் வேளாண்மை கல்லூரி துவங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அவர் அறிவித்தபடி வேளாண்மை – சட்டக்கல்லூரி கள் துவக்கப் பட்டன. தற் பொழுது ரூபாய் 167 கோடி செல வில் இரண்டு கட்டிடங்கள் அழகாக கட்டப்பட்டுள்ளது.

### முதல்வரை மனதார பாராட்டுகிறேன்!

எங்களது கோரிக்கையை நிறைவேற்றி தந்த முதல்வரை நான் மனதார பாராட்டுகிறேன்.

முதல்வரின் நடவடிக்கை யால் சிவகங்கை மாவட்டம் கல்வி மாவட்டமாக மாறி வருகி றது. இன்னும் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நாடாளு மன்றத் தொகுதி முழு அளவில் அனைத்து வசதிகள் நிறைவே றிய மாவட்டமாக மாற வேண் டும் என்பது என்னுடைய விருப் பமாகும் .

அதையும் முதல்வர் அவர் கள் நிறைவேற்றி தருவார். அதை மூன்று மாதம் கழித்து நான் கோரிக்கையாக உங்களு டன் நேரில் வைப்பேன்.

அப்பொழுதும் அதற்கென்ன செஞ்சிடலாம் என்று நீங்கள் கூற வேண்டும். இங்கு வேளாண்மை– சட்டக் கல்லூரி வரு வதற்கு உதவிய கூட்டுற வுத்துறை அமைச்சர், சட்டத் துறை அமைச்சர், வேளாண் அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர், ஒப்பந்தக்காரர் பணியாற்றிய பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வருக்கும் என் சார்பி லும் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கி றேன்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம். பி. பாராட்டி பேசினார்.

## நாடாளுமன்றத்தில் இன்று

# ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல்!

## நிதியமைச்சர் தாக்கல் செய்கிறார்!



புதுடெல்லி, பிப். 1 –

நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக ஞாயிற்றுக்கிழ மையான இன்று, ஒன்றிய அரசு, நடப்பு நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய் யவுள்ளது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட் டத்தொடர் கடந்த வியாழனன்று குடியரசுத் தலைவரின் உரையுடன் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து இன்று நடப்பு நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப் பட உள்ளது. இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக விடு முறை நாளான ஞாயிற்றுக்கிழமை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யப்படுகிறது.

கடந்த 2017–18 ஆம் நிதி யாண்டில் இருந்து பிப்ரவரி ஒன் றாம் தேதி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டும் பிப்ர வரி ஒன்றாம் தேதி, ஞாயிற்றுக்கி ழமை என்றாலும் நிதிநிலை அறிக் கையை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நாடாளு மன்றத்தில் குடியரசு தலைவர் உரை மீதான விவாதம் நடைபெறு கிறது. பிப்ரவரி 2,3,4 தேதிகளில் விவாதம் நடத்த அலுவல் ஆய்வு கூட்டம் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு மக்களவை 18 மணி நேரத்தை ஒதுக்கி உள்ளது.

மாநிலங்களவையில் விவா திக்க 16 மணி நேரம் ஒதுக்கப்பட் டுள்ளது. மக்களவையில் 4 ஆம் தேதியும், மாநிலங்களவையில் 5 ஆம் தேதியும் பிரதமர் பதிலளிக்கி றார். அதன் பின்னர் பட்ஜெட் மீதான விவாதம் 5 ஆம் தேதி தொடங்கி 11 ஆம் தேதி வரை நடை பெறும். 11 ஆம் தேதி நிதி அமைச் சர் நிர்மலா சீதாராமன் பதிலளிக்க திட்டமிடப்பட் டுள்ளது.